செய்தி வெளியீடு எண் : 2230 நாள் : 07.11.2023

# மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற திரைப்படத்துறையினர் நலவாரிய புதிய உறுப்பினர்களின் அறிமுகக் கூட்டம்

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில், திரைப்படத்துறையினர் நலவாரிய புதிய உறுப்பினர்களின் அறிமுகக் கூட்டம் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தலைமையில் 07.11.2023 இன்று காலை 11.00 மணியளவில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திரைப்படத்துறையினரின் நலன் கருதி பல்வேறு நலத்திட்டங்களை தீட்டி அவற்றை சிறப்பான முறையில் செயல்படுத்தினார்கள். திரைப்படத்துறையினர் நலனில் அக்கறை கொண்டுள்ள இந்த அரசு திரைப்படத்துறையினர் மற்றும் சின்னத்திரை கலைஞர்கள் மென்மேலும் வாழ்வாதாரத்தில் சிறந்து விளங்க வேண்டும் என்பதற்காக பல்வேறு நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

இந்நாள் வரை திரைப்படத்துறையினர் நலவாரியம் மூலம் திரைப்படத்துறை, சின்னத்திரை, அவை சார்புடைய தொழிலாளர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் அனைவருக்கும் உதவிடும் வகையில் 2,848 பயனாளிகளுக்கு ரூ.95இலட்சத்து 59 ஆயிரத்து 250 மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது திரைப்படத்துறையினர் நலவாரியத்தில் தற்போது 26,792 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். 2022 ஆம் ஆண்டுக்கு நலத்திட்ட உதவி வேண்டி வரப்பெற்ற விண்ணப்பங்களின்படி 122 நபர்களுக்கு ரூ.7,75,500/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் விரைவில் வழங்கப்படும் என மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் தனது உரையில் தெரிவித்தார்கள்.

மேலும், திரைப்படத்துறைக்கு எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வரும் இவ்வரசு, திரைப்படத்துறையினர் நலவாரிய நிதி ஆதாரத்தினை பெருக்குவதற்கு படப்பிடிப்பு கட்டணத் தொகையிலிருந்து 50 சதவீத தொகை நலவாரியத்திற்கு வழங்கப்பட்டு வருகிறது. திரைப்படத்துறை மற்றும் சின்னத்திரையை சார்ந்து வாழும் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களின் வாழ்வாதாரம் உயரவும், அவர்கள் மகிழ்ச்சியுடன் வாழவும் தொடர்ந்து பாடுபடும் எனவும் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்துக் கொண்டார்கள்.

திரைப்படத்துறையினர் நலவாரிய உறுப்பினர்களான திரைப்பட தயாரிப்பாளர் திரு.முரளிராமசாமி, திரைப்பட நடிகர் திரு.எம்.எஸ்.பாஸ்கர், திரைப்பட நடிகர் திரு.பூச்சி எஸ்.முருகன், திரைப்பட நடிகர் திரு.போஸ்வெங்கட், திரைப்பட இயக்குநர் திரு.மங்கை அரிராஜன், திரைப்பட நடிகர் திரு.பிரேம்குமார், திரைப்பட நடிகர் திரு.தாடிபாலாஜி, திரைப்பட பின்னணி குரல் கலைஞர் திரு.ஜெ.மதியழகன், திரைப்பட தயாரிப்பு நிருவாகி திரு.வி.பாக்கியராஜ், திரைப்பட ஒலிப்பதிவாளர் திரு.பரிமளவாசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும், இக்கூட்டத்தில் அலுவல்சார் உறுப்பினர்கள், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் மரு.இரா.செல்வராஜ், இ.ஆ.ப., அவர்கள், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை செயலாளர் திரு.வே.ராஜாராமன், இ.ஆ.ப., அவர்கள், இயக்குநர்/ உறுப்பினர் செயலர் திரு.த.மோகன்,இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் இயக்குநர் (செய்தி) திரு.ச.செல்வராஜ் அவர்கள், கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு) திரு.க.இளந்திரையன் அவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in